**தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்**
Tamil Study Centre, Homebush Inc.
Postal Address: P O Box 4032, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# ஆண்டிறுதிப் பரீட்சை 2022

ஆண்டு: 6 திகதி: 26-11-2022

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி. தேவரதி குலராஜா
உதவி: செல்வி.ஜனனி குலராஜா

மாணவர் பெயர்:______________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 14 | |
| வினா 3 | 30 | |
| வினா 4 | 15 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 16 | |
| மொத்தப் புள்ளிகள் | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

கீழே உள்ள உரைப்பகுதியை வாசித்து, தரப்பட்ட வினாக்களுக்கு பூரணமாக விடை தருக.

## போக்குவரத்து

மக்கள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதற்குப் பல விதமான போக்குவரத்துச் சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர். பிரயாணம் செய்யும் தூரத்திற்கு ஏற்ப போக்குவரத்துச் சாதனங்களைத் தெரிவுசெய்து பயன்படுத்துகின்றனர்.

முற்காலத்தில் மக்கள் நடந்து தாம் போகவேண்டிய இடங்களுக்குச் சென்றனர். பின்னர் மாடு, குதிரை, போன்ற மிருகங்கள் இழுக்கும் வண்டியில் பயணம் செய்தனர். தரைவழியாகவும், கடல்வழியாகவும், ஆகாயவழியாகவும் மக்கள் போக்கு வரத்துச் செய்கின்றனர். தரைமார்க்கமாகப் பயணம் செய்ய துவிச்சக்கரவண்டி, மோட்டார் வண்டி, முச்சக்கரவண்டி, பேருந்து, தொடருந்து போன்றவற்றையும், கடல் மார்க்கமாகப் பாய்க்கப்பல், வள்ளம், பெரியகப்பல்கள் போன்றவற்றையும், ஆகாயமார்க்கமாக விமானம், உலங்குவானூர்தி (Helicopter) போன்றவற்றையும் பயன்படுத்துகின்றனர். விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக மிக நீண்ட தூரத்தை மிகக் குறுகிய நேரத்தில் சென்று அடையத்தக்க வகையில் போக்குவரத்துச் சாதனங்களும், வசதிகளும் நாளுக்கு நாள் விரிவடைந்து வருவது உலகின் பொருளாதார விருத்திக்குப் பெரும் துணைபுரியும் ஒரு விடயமாகும்

1 முற்காலத்தில் பிரயாணம் செய்ய மக்கள் பயன்படுத்திய இரண்டு மிருகங்கள் எவை?

---

2 எரிபொருள் பயன்படுத்தாமல் பிரயாணம் செய்யக்கூடிய சாதனங்கள் இரண்டு தருக.

---

3 Helicopter என்பதன் சரியான தமிழ்ப்பதம் என்ன?

---

4 வான்வழியாகப் பயணம் செய்ய மக்கள் பயன்படுத்தும் சாதனங்கள் இரண்டு தருக.

---

5 தரைவழியாகப் பயணம் செய்யப் பயன்படுத்தும் சாதனங்களில் அதிக மக்களை ஏற்றிச் செல்லக்கூடிய இரண்டு பிரயாண சாதனங்கள் தருக?

---

6 கொடுக்கப்பட்ட தமிழ்ச் சொல்லுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை இணையுங்கள்.

| | |
|---|---|
| 1. வாகனங்கள் | Bicycle |
| 2. பிரயாணம் | Yatcht |
| 3. துவிச்சக்கரவண்டி | Vechiles |
| 4. ரயில் பாதை | Short time |
| 5. கடல்பயணம் | Electric Line |
| 6. கட்டுமரம் | Travel |
| 7. பாய்க்கப்பல் | Railwayline |
| 8. குறுகிய நேரம் | Voyage |
| 9. நீண்ட தூரம் | Sailingship |
| 10.மின்சாரக் கம்பி | Long distance |

| வினா இல | 2 | புள்ளிகள் | 14 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

பொருத்தமான பதில் தருக.

1 **கமலாவும் வாணியும் கோவிலுக்குச் சென்றார்கள்**. இதில் சென்றார்கள் என்பதன் நிகழ்காலம் என்ன?

---

2 **பூனை பால் குடிக்கும்.** – இதில் குடிக்கும் என்பதன் இறந்தகாலம் என்ன?

---

3 **பறவைகள் பறக்கின்றன**. இதில் பறக்கின்றன என்பதன் எதிர்காலம் என்ன

---

4 **குழந்தை அழுதது.** – அழுதது என்பதன் எதிர்ச்சொல் என்ன?

---

5 **கோபாலன் வறுமையில் வாடினான்.** – வறுமை என்பதன் எதிர்ச்சொல் என்ன?

---

6 **பாலன் தூங்கினான்.** – தூங்கினான் என்பதன் ஒத்த சொல் தருக

---

7 **விமானம் ஆகாயத்தில் பறந்தது.** – ஆகாயம் என்பதற்கு ஒத்தசொல் தருக.

---

8 **சூரியன் காலையில் உதிக்கும்.** – சூரியன் என்பதற்கு ஒத்தசொல் தருக.

---

9 **வாணி கீதம் பாடினாள்.** – இதில் செயப்படு பொருள் என்ன?

---

10 **பாரதியார் ஒரு கவிஞர்.** – இதில் எழுவாய் என்ன

---

11 **மாணவர்கள் நாடகம் நடித்தார்கள்.** – இதில் பயனிலை என்ன?

---

சேர்த்து எழுதுக

12 மரம் + வேர் = ________________

13 பரிசு + அளிப்பு = ________________

பிரித்து எழுதுக

14 வாழைப்பழம் = ______ + _______

| வினா இல | 3 | புள்ளிகள் | 16 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

பெயராகவும் வினையாகவும் வர வாக்கியம் அமையுங்கள்.

1 தை

பெயர்: ___________________________________________

வினை: ___________________________________________

2 படி

பெயர்: ___________________________________________

வினை: ___________________________________________

3 ஆடு

பெயர்: ___________________________________________

வினை: ___________________________________________

4 மடி

பெயர்: ___________________________________________

வினை: ___________________________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 15 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

தந்தையின் சுகவீனத்தால் மனக்கவலை அடைந்து பாடசாலைக்கு ஒழுங்காக வராமல் இருக்கும் உமது நண்பர்/நண்பிக்கு பரீட்சையில் பங்குபற்றுவதற்கு அறிவுரை கூறி 50 சொற்களுக்குக் குறையாது கடிதம் எழுதுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 7 |

தொடங்கிய கதையை உங்கள் கற்பனையில் 50 சொற்களுக்கு குறையாது எழுதிமுடியுங்கள்.

அன்று மழைநாள் இரவு 7 மணி, நானும் அம்மா, அப்பா, தங்கை, தம்பி யாவரும் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தோம். வெளியில் கடும் மழை பெய்து கொண்டிருந்தது. தீடீரென எமது வீட்டுக் கதவில் உரசல் சத்தம் கேட்டது. நானும் தம்பியும் பயத்தில் அப்பாவிடம் ஓடினோம். அப்பா பயப்படவேண்டாம் என்று கூறியவாறு எழுந்து சென்று கதவைத் திறந்தார். என்ன ஆச்சரியம்! ஒரு அழகிய வெள்ளை நாய்க்குட்டி குளிரில் நடுங்கியபடி நின்றது. பார்க்கப் பரிதாபமாக இருந்தது..........

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்கு குறையாது கட்டுரை எழுதுக.

1 தந்தையர் தினம்.

2 தமிழர் கலாசாரம்

3 வெள்ளப் பெருக்கு

4 உமக்கு மிகவும் பிடித்த தமிழர் கலாசார உணவு ஒன்று தயாரித்து உண்டு மகிழ்ந்தது.

5 சிட்னி நகரின் மின்விளக்கு அலங்காரம்.